1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொன்னது மதுரை சம்பவம் அல்ல, வேலூர் என்று திருத்தம் செய்து கொள்ள வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: சிங்காரம், (குறுக்கீடு) இளம்வழுதி உட்காருங்கள். மேற்கொண்டு இதிலே விவாதம் அனுமதிக்க முடியாது. சிறப்புக் கவன ஈர்ப்பிலோ, விதி 56-ன் கீழ் ஒத்திவைப்புத் தீர்மானத்தில்-எடுத்துக்கொள்வதிலோ முதலமைச்சருடைய விளக்கத்திற்குப் பிறகு விவாதம் அனுமதிப்பதில்லை. (குறுக்கீடு) ஒவ்வொரு முறையும் இந்தமாதிரி விளக்கம் அளித்ததற்குப்பிறகு அனுமதி கேட்கிறீர்கள். அனுமதி கொடுக்க முடியாது. (குறுக்கீடு) திரு. பரிதி முறைகேடாக நடந்துக்கொண்டதற்கு ஒன்று மன்னிப்புக் கேட்க வேண்டும், இல்லை என்றால் வெளிநடப்புச் செய்ய வேண்டும். வெளியே போகலாம். (குறுக்கீடு) பின் ஏன் இந்தமாதிரி கை நீட்டி பேசிக் கொண்டிருக்கிறீர்கள்? உட்காருங்கள். ஒவ்வொரு முறையும் இந்தமாதிரிச் செய்யக் கூடாது. உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, நான் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும். (குறுக்கீடு) திரு. பரிதி நீங்கள் ஒவ்வொரு முறையும் இதைப்போல ஜீரோ அவர் மென்ஷனிலே அது முடிந்த பிறகு எழுந்து இந்தமாதிரி செய்வது நல்லது அல்ல. முறைகேடாக நடந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள். (குறுக்கீடு) அது பொதுவான விவாதத்தில். இதிலே அனுமதிக்க முடியாது, உட்காருங்கள். திரு. சிங்காரம். (குறுக்கீடு) இளம்வழுதி நான் நடவடிக்கை எடுக்க வேண்டிவரும்.

முற்பகல் 11-45

திரு. இளம்வழுதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நான் பேசுவதற்கு வாய்ப்பு தராததால், I am staging a walk out.

(திரு. இளம்வழுதி வெளிநடப்புச் செய்தார்)

(ஆ) தாம் தாக்கப்பட்டது குறித்தும், தமக்குப் போதுமான பாதுகாப்பு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும் உறுப்பினர் திரு. ஆர். சிங்காரம் வேண்டுகோள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இந்தமாதிரி ஜீரோ ஹவரிலோ, ஸ்பெஷல் மென்ஷன் என்கின்ற வகையிலோ அல்லது ஒத்திவைப்புத் தீர்மானமாக எடுத்துக்கொள்கின்றபோதோ மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அல்லது அமைச்சர்கள் விளக்கம் அளித்ததற்குப் பிறகு எப்போதும் புதிய விளக்கம் அளிப்பதற்கு அனுமதிப்பதில்லை. அப்படி விளக்கம் கோர வேண்டும் என்று சொன்னால் அவர்கள் விதி 55-ன் கீழ் கவன ஈர்ப்பாகக் கொடுத்து அதற்குப் பதில் வருகிற வரையிலேயும்

காத்து இருக்க வேண்டும் என்பதுதான் விதி. சில நேரங்களில் நான் பேச அனுமதிப்பதில்லை; எனவே வெளிநடப்புச் செய்தார்கள் என்று பத்திரிகையிலேயும் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். விதி முறைப்படி வராத காரணத்தினாலே நான் அனுமதிக்க முடியவில்லை என்றுதான் நான் சொல்லிக் கொண்டிருக்கிறேன். அவர்கள் விதிமுறைப்படி நடந்துக்கொள்ளாத காரணத்தினால் நான் அனுமதிக்கவில்லை; எனவே வெளிநடப்புச் செய்தார்கள் என்று செய்தி வெளியிட்டால் பரவாயில்லை. ஏதோ இங்கே பேசவே அனுமதிப்பதில்லை என்பதைப் போல சில பத்திரிகைகளில் செய்தி வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே விதி முறைகளுக்கு உட்பட்டு வரவேண்டும் என்று நான் கூறுகிறேன். விதி முறைகளுக்கு உட்பட்டு வராமல் எங்களைப் பேச அனுமதிக்க வேண்டும் என்று கேட்கின்ற நேரத்திலேதான் நான் பேச அனுமதிக்க முடியவில்லை. எனவே, அந்த விதிமுறைகளுக்குட்பட்டு வராமல் இங்கே விவகாரம் செய்துவிட்டு வெளியே போகிறார் என்றுதான் இதற்குப் பொருள். திரு. சிங்காரம், உங்களுடைய பிரச்சினையை மட்டும் சொல்லலாம்.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சட்டமன்ற லீவு நாட்களில் ஊருக்குச் சென்று மக்களை பார்த்துவிட்டு வருவது வழக்கம். அந்த ரீதியில் கடந்த வெள்ளி, சனி, ஞாயிறு 3 நாட்களும் பேராவூரணி சென்று திரும்பி கம்பன் எக்ஸ்பிரஸில் வருகின்றபோது பட்டுக்கோட்டையிலே தனியார் பள்ளி 5 பள்ளிகளுக்காக இந்த அரசிடத்தில் ஜப்தி நடவடிக்கையை கைவிடும்படி கேட்டுக்கொண்டு அந்த ஜப்தி நடவடிக்கை கைவிடப்பட்டு அந்த மாணவர்கள் உடனடியாக பரிட்சை எழுதி, அந்த மகிழ்ச்சிக் கடலில் தனியார் பள்ளி நிர்வாகிகளும், பள்ளி மாணவர்களும், பெற்றோர்களும், ஆசிரியர்களும், நூற்றுக்கணக்கான நண்பர்களும் வந்து என்னிடத்தில் நன்றி சொல்லி, தமிழக முதல்வர் அவர்களுக்கும் எங்களுடைய நன்றியைச் சொல்லுங்கள் என்று சொல்லி, அவர்களும் 2,000, 3,000 தபால்கள் நம்முடைய முதலமைச்சருக்கு எழுதி நன்றி தெரிவித்திருக்கிறார்கள். அந்த நன்றி தெரிவிக்கின்ற நேரத்தில் மீண்டும் அந்த ப்ராபர்ட்டி டாக்ஸையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை கொண்டு வந்து என்னிடத்தில் கொடுத்து நான் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் திடீரென்று சமூக விரோதி ஒருவர்– நான் முன்கூட்டியே நெஞ்சில் காயம்பட்டவன், இருதய நோயால் பாதிக்கப்பட்டு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு ட்ரீட்மெண்ட் இன்னும் எடுத்துக்கொண்டு இருக்கின்றவன், அந்த இடத்தில்–என் நெஞ்சில் குத்தினால் உயிர் போய்விடும் என்று திட்டமிட்ட சதியின்

காரணமாக, ஒருவரை யாரோ தூண்டிவிட்டு என்னை கொலை செய்வதற்கு திட்டமிட்டு அவருடன் 4, 5 ஆட்கள் அரிவாள், கம்பு ஆயுதங்களுடன் பின்னாலே இருந்துக்கொண்டு என்னைத் தாக்குவதற்கு முயற்சி செய்தபோது என்னை அங்கிருந்த செக்யூரிட்டியும் மற்றவர்களும் பாதுகாத்து அனுப்பினார்கள். ட்ரெயினும் புறப்பட்டுவிட்டது. ஏறிவிட்டேன். அந்த நபரை அடித்து கொல்லக்கூடிய அளவுக்கு அந்தக் கூட்டம் இருந்தது. ஆனால் அவர்களை நான் கேட்டுக் கொண்டேன், நான் காந்தியவாதி, காங்கிரஸ்காரன், யாரையும் துன்புறுத்தக்கூடாது என்பதற்காக தயவு செய்து அவரை விட்டுவிடுங்கள் என்று சொல்லி நான் ட்ரெயின் ஏறி வந்துவிட்டேன். நான் சென்னை வந்த பிறகு நேரடியாகத் தங்களைப் பார்த்து மனுவும் கொடுத்து இருக்கிறேன். அதே நேரத்தில் முதலமைச்சர் அன்று வராத காரணத்தினால் அந்த மனுவையும் தங்களிடத்தில் கொடுத்திருக்கிறேன். தாங்கள் உரிய நடவடிக்கை எடுப்பதாகச் சொல்லி உடனடியாக நடவடிக்கை எடுத்து ஏ1 குற்றவாளியைத் தவிர மற்றவர்கள் எல்லாம் அவசர நடவடிக்கை எடுத்து கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அதே நேரத்தில் உரிய பாதுகாப்பு மேற்கொண்டு கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். ஒரே ஒரு ஹெட் கான்ஸ்டபிள், ஊரிலே 5 போலீஸ்காரர்கள் பாதுகாப்பாளர்களாக இருக்கிறார்கள். என்னுடைய உயிரை குடிப்பதற்கு சிலர் திட்டமிட்டு இன்னும் சதி செய்துக்கொண்டிருக்கிறார்கள். எனக்கு இன்னும் கொலை மிரட்டல் வந்துகொண்டிருக்கிறது. பாதுகாப்பற்ற நிலையில் இருக்கின்ற எனக்கு மேற்கொண்டு கூடுதல் பாதுகாப்பு தரவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு அந்த குற்றவாளியையும் நீங்கள் உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில் என் பிரச்சினையை இத்தோடு விட்டுவிட்டு, நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள் ப்ராபர்ட்டி டாக்ஸை ரத்து செய்ய வேண்டுமென்று நாங்கள் கோரிக்கை கொடுத்தபோது அந்த கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், தனியார் பள்ளி உரிமையாளர்கள், தமிழக மக்கள் அத்தனை பேர்களுடைய கோரிக்கையை ஏற்றுக்கொண்டு நம்முடைய தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் அந்த ப்ராபர்டி டாக்ஸை அறவே முழுவதுமாக தள்ளுபடி செய்ததற்காக என் சார்பாகவும், மாணவர்கள் பெற்றோர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் சார்பாகவும் நன்றிகலந்த வணக்கத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்து என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியையும் தமிழக முதல்வர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[1994 ஏப்ரல் 8

முற்பகல் 11.50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சிங்காரம் அவர்கள் அன்றைக்கு என்னிடத்தில் அந்தப் புகார் மனுவைக் கொடுத்தவுடன் உடனடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கும் அவருடைய புகார் மனுவை நான் கொண்டு சென்றிருந்தேன். அதைப்போல அவருடைய புகார் மனுவைக் காவல் துறை இயக்குநர் அவர்களுக்கும் அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டதை ஒட்டி அவர் எனக்குக் கொடுத்த அந்தப் புகார் மனுவையே புகாராக ஏற்றுக்கொண்டு அவரைத் தாக்கியவர்கள் மீது உடனடியாக தக்க நடவடிக்கை எடுக்கிறோம் என்று உறுதி அளித்து இருந்தார்கள். அதைப்போல அன்றைக்கு இரவே அதில் சம்பந்தப்பட்டவர்கள் 6 பேரைக் கைது செய்து அவர்கள் மீது கொலை முயற்சி உட்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அவர் தெரிவித்திருக்கிற குற்றவாளிகளில் அந்த நம்பர் 1 குற்றவாளி சென்னையில் வந்து தலைமறைவாக இருப்பதாக அவர்களுக்குத் தகவல் இருப்பதாகவும் தெரிவித்திருக்கிறார்கள். அவரையும் விரைவில் பிடிக்கிறோம் என்ற உறுதியை வழங்கியிருக்கிறார்கள். உங்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டு வருகிறது என்பதையும் தெரிவித்திருக்கிறார்கள். தற்போது வழங்கப்பட்டு வரக்கூடிய பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று நீங்கள் தெரிவிப்பீர்களேயானால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே இங்கே உங்களுடைய கோரிக்கையைக் கேட்டிருக்கிறார்கள். அந்தப் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் எந்த அளவுக்கு இருக்க வேண்டும் என்பதை அவர்களே உரிய அதிகாரிகளோடு கலந்து பேசி நடவடிக்கை எடுப்பார்கள் என்று நம்புகிறேன். உங்களைத் தாக்கியவர்களைப் பொறுத்த வரையில் எந்த அளவுக்கு அவர்களுக்குக் கடுமையான தண்டனை வழங்க வேண்டுமோ அந்த அளவுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடு செய்து வருவதாக காவல் துறையினர் தெரிவித்திருக்கிற காரணத்தால், அதில் உரிய நடவடிக்கை எடுப்பார்கள் என்கிற நம்பிக்கையை நீங்களும் பெறலாம். நீங்கள் தெரிவிக்கிற அந்த முதல் குற்றவாளி தப்பித்து எங்கோ ஒளிந்து கொண்டிருப்பதாக நேற்றும்கூட எனக்குச் சொல்லியிருக்கிறார்கள். அவரை விரைவில் பிடிப்பார்கள் என்று நான் நம்புகிறேன். எனவே, உங்களுக்குப் பாதுகாப்பைப் பொறுத்தமட்டில் உரிய பாதுகாப்பு இருக்கும் என்பதை மீண்டும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

1994 ஏப்ரல் 8]

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் தனக்கு வழங்கப்பட்டு வரும் பாதுகாப்பு போதுமானதாக இல்லை என்று கருதுவதால், அதை அவர் எழுத்தில் கொடுத்தால் காவல் துறை உயர் அதிகாரிகளுடன் நான் பேச்சுவார்த்தை நடத்தி எந்த அளவில் அவருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளை அதிகப்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதைப் பற்றி பரிசீலித்து முடிவு எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

3. கவன ஈர்ப்பு

(அ) கோயம்புத்தூர் உக்கடம் பேருந்து நிலையத்தை சீர் செய்வதற்காக கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்த கவன ஈர்ப்புகள். திரு. கே. செல்வராஜ் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு கே. செல்வராஜ்.

திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'கோயம்புத்தூர்-உக்கடம் பேருந்து நிலையம் மிகவும் மோசமாக உள்ளதால் அதை உடனடியாக சரி செய்ய பேருந்து நிலையத்தை கோயம்புத்தூர் மாநகராட்சியிடம் ஒப்படைக்க வேண்டியது குறித்த' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டிருக்கிறது.

அறிக்கை

தற்போது உக்கடத்தில் அமைந்துள்ள பேருந்து நிலையம் சேரன் போக்குவரத்துக் கழகத்தால் பராமரிக்கப்பட்டு வருகிறது. பொதுப் பணித் துறைக்கு சொந்தமான மேற்படி நிலம் வருவாய் பிரிவுக்கு கொடுக்கப்பட்டு *30-11-1982*-ன் அரசு ஆணையின்படி சேரன் போக்குவரத்துக் கழகத்திற்கு நிலமாற்றம் செய்யப்பட்டு அந்த நிலத்தின்